பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 26 | சனிக்கிழமை | 12.10.2024 | அதிர்வு 71

## 22 மாவட்டங்களில் 690 அணிகள் போட்டி

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு



வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களில் 690 06



# வீட்டை விட்டு வெளியே வர எமக்கு விருப்பமே இல்லை!

### வெளியே வந்த சுயேச்சைக் குழு கவலையுடன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், பிரபாகரன் டிலக்சன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு உண்மையில் எமக்கு விருப்பமில்லை. ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ஜனநாயகம் மூலம் எமது பலத்தைக் காட்ட வேண்டியிருக்கின்றது. மக்களை ஒன்று சேர்த்து எல்லோரையும் அணிதிரட்ட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம்."

- இவ்வாறு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 'மாம்பழம்' சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தெரிவித்தனர். 06

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## வியாழேந்திரன் கட்சியின் வேட்புமனுக்கள் நிராகரிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தாக்கல் செய்த ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுள்ளன.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 சுயேச்சைச் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் 49 அணிகளின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன

என்று மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார். 06




நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளுதல் நேற்றுடன் முடிவடைந்து விட்டது. தேர்தல் போட்டியாளர்கள் யார் என்பது வெளியாகிவிட்டது. தெளிவாகி விட்டது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் எண்ணுக் கணக்கின்றி சுயேச்சைகள் களத்தில் குதித்த மாதிரி நாடாளுமன்றத் தேர்தலிலும் சுயேச்சைக் குழுக்கள் பெரும் எண்ணிக்கையில் குதித்திருக்கின்றன.

ஜனநாயக தேர்தல் முறைமையில் சுயேச்சைகளுக்கு இடமளித்தல் முக்கியமானது என்றாலும், இப்போது தேர்தல்களில் குதித்திருக்கும் சுயேச்சை அணிகளில் எண்ணிக்கையை நோக்கும் போது இது ஜனநாயக தேர்தல் முறைமைக்கு கிடைத்த பின்னடைவோ என்று சிந்திக்க 06





# மாவையைச் சந்தித்த சுயேச்சைக் குழுவினர்





வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் "மாம்பழம்" சின்னத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடவுள்ள ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் சிலர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது "மாம்பழம்" சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மாவை சேனாதிராஜாவுக்கு மாம்பழத் தை வழங்கி வைத்தனர்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# எமில்காந்தன் குழுவினர் வன்னியில் வேட்புமனு!









(கி.வசந்தன்)

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை எமில்காந்தன் நேற்று தாக்கல் செய்தார்.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எமில்காந்தன் தலைமையிலான வேட்பாளர்கள் குழுவினர் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நேற்றுக் காலை வேட்புமனுவை அவர்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இதன்போது போட்டியிடுகின்ற வேட்பாளர்களும் வருகை தந்திருந்தனர்.

# மறு அறிவித்தல் வரை கடற்பிராந்தியங்களுக்கு செல்ல வேண்டாம்; மீனவர்களுக்கு அறிவுறுத்தல்



புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களுக்கு மறு அறிவித்தல் வரை பயணிக்க வேண்டாம் என மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பலத்த காற்று, கடல் கொந்தளிப்பு காரணமாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மேற்படி கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வரை பலத்த காற்று வீசக்கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால். மேற்படி கடற்பிராந்தியங்கள் இடைக்கிடையே கொந்தளிப்பாக இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து காலி மற்றும் மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலை 2.5 – 3 மீற்றர் வரை உயரும் சாத்தியமுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கையர்கள் தாய்லாந்திடம் உதவியை கோரும் இலங்கை பிரதமர்



மியன்மாரின் மியாவாடி பிராந்தியத்தில் இணையக் குற்ற மையங்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு தாய்லாந்து அரசாங்கத்தின் உதவியை பிரதமர் ஹரினி அமரசூரிய கோரியுள்ளார்.

தாய்லாந்து தூதுவர் பைட்டூன் மஹாபன்னபோர்ன் மற்றும் பிரதமர் ஹரினி அமரசூரிய ஆகியோருக்கு இடையில் பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இணையக்குற்ற மையங்களிலிருந்து 28 இலங்கையர்களை மீட்பதற்கு தாய்லாந்து அரசாங்கம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்த பிரதமர், மேற்படி பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 இலங்கையர்களை மீட்பதற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த கலந்துரையாடலில் இலங்கை மற்றும் தாய்லாந்து இடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்தவும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் தாய்லாந்து தூதுவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நவீன விவசாய தொழில்நுட்பப் பயன்பாடு, ருஹுனு பல்கலைக்கழகம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய பீடங்கள் இணைந்து அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பம், உணவு பதப்படுத்துதல் போன்ற ஆராய்ச்சித் துறைகளுக்கான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.



# ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சமந்தா பவருடன் கலந்துரையாடல்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கும், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் நிருவாகி சமந்தா பவருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று இணைய தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்றது.

பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதி மற்றும் சமந்தா பவர் ஆகியோருக்கு இடையில் கருத்துப் பரிமாறப்பட்டதுடன், எதிர்காலத்தில் இலங்கைக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அரசாங்கம் முன்வைத்த கொள்கை அறிக்கைக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் கொள்கைகளுக்கும் இடையிலான ஒற்றுமையை இதன்போது சுட்டிக்காட்டிய சமந்தா பவர், மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் முழு ஆதரவு வழங்கப்படும் என்றும் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்தவும், அதேபோன்று சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் இந்தச் செயற்பாடுகள் உதவும் எனவும் சமந்தா பவர் சுட்டிக்காட்டினார்.

# சாம்பிக்க ரணவக்கவிற்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

2016 ஆம் ஆண்டு ராஜகிரிய பகுதியில் ஏற்பட்ட விபத்து தொடர்பான சாட்சியங்களை மறைத்தமை மற்றும் உருவாக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையைக் கைவிட்டு உயர்நீதிமன்றினால் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் பிரதிவாதியான பாட்டலி சம்பிக்க ரணவக்க சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி அமரசிறி பண்டித்தரத்ன இதன்போது தெரிவித்தார்.

இதற்கமைய, இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு மற்றுமொரு தினத்தை வழங்குமாறும் சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த கோரிக்கைக்கு அமைய, வழக்கு விசாரணையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி மீள அழைப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





# 24 மணித்தியாலங்களில் பலத்த மழை பெய்யும்

அடுத்த 24 மணித்தியாலங்களில் நாட்டில் பலத்த மழை பெய்யும் பிரதேசங்கள் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்க ளிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

இதேவேளை, மழைக் காலங்களில் மின்னல் மற்றும் காற்று வீசும் நிலையிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறும் பொதுமக்கள் வளிமண்டலவியல் திணைக் களத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# களனி கங்கை பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை



நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக களனி கங் கையை அண்மித்த தாழ் நிலப்பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, சீதாவாக்கை, தொம்பே, ஹோமாகம, கடுவலை, பியகம, கொலன்னாவ, கொழும்பு மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளுக்கு எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அத்தனகலு ஓயாவை அண்மித்த தாழ் நிலப்பகுதிகளுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

களனி மற்றும் களு கங்கையின் நீர்மட்டமும் அதிக ரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டியதாக இருக்கின்றது.

இலங்கையின் சட்டங்கள் விநோதமானவை.

உள்ளூராட்சித் தேர்தலில் ஒருவர் போட்டியிடுவதற்கு தலைக்கு ஐயாயிரம் ரூபா செலுத்த வேண்டியிருக்கும். ஆனால் நாடாளுமன்றத்துக்கு அத்தொகை ஆக 2000 ரூபா மட்டுமே. அதனால்தான் இவ்வளவு எண்ணிக்கையில் சுயேச்சை அணிகள் தேர்தலில் குதித்து இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் 1,500 பேருக்கு ஒரு வேட்பாளர். அதுவே வன்னியில் 700 பேருக்கு ஒரு வேட்பாளர் என்ற அளவுக்கு வேட்பாளர்கள் எண்ணிக்கை அதிகமாகி விட்டது.

2000 ரூபா பணம் இருந்தால் நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஓர் அணியில் வேட்பாளராகிவிடலாம். ஆனால் அந்த அணியின் ஒரு சிறிய தொகையைப் பெற்றுக் கொண்டு அதற்காக வாக்குச் சீட்டில் இருந்து ஒவ்வொரு விடயத்திற்கும் பெருந்தொகைப் பணத்தை அரசு கண்ணை மூடிக் கொட்டிச் செலவழிக்க வேண்டி இருக்கும்.

சுயேச்சைகள் விடயத்தில் எதிர்காலத்தில் அதிகார வர்க்கம் தீர்க்கமான ஒரு முடிவை - கட்டுப்பாட்டை - முன்னெடுக்காவிட்டால் ஜனநாயக தேர்தல் முறைமைக்கே ஆபத்து ஏற்படக்கூடிய சூழல் உண்டு.

## 22 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுக்கள் போட்டியிடப் போகின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

74 குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அநீதிகள் இடம்பெற்றுள்ளதாக உணர்ந்தால் அந்தக் குழுக்கள் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறுகையில்,

“அம்பாறை தேர்தல் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான அரசியல் குழுக்கள் போட்டியிடுகின்றன. அதன் எண்ணிக்கை 64 ஆகும்.

மொனராகலை மற்றும் பொலனறுவை தேர்தல் மாவட்டங்களில் குறைந்த எண்ணிக்கையிலான அணிகள் போட்டியிடுகின்றன. அங்கு தலா 15 அணிகள் போட்டியிடுகின்றன.” - என்றார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## வீட்டை விட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் அதிருப்தியடைந்த குழுவினர் யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு என்ற பெயரில் சுயேச்சையாகக் களமிறங்கி நேற்று வெள்ளிக்கிழமை காலை வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் வேட்புமனுத் தாக்கலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, வேட்பாளரான முன்னாள் நாடாளுமன்ற ஈ.சரவணபவன் ஆகியோர் கூட்டாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

“நாங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து வந்தோம். அங்கே ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. தனிநபர் ஆதிக்கத்தால் அங்கிருந்து பலர் வெளியேறி விட்டார்கள். இறுதியில் தலைவரும் இராஜிநாமக் கடிதம் அனுப்பிவைத்தார்.

யார் யார் விலகினார்கள் என்பதை 2009 இற்குப் பின்னர் அடுக்கிக் கொண்டே போகலாம். எல்லோரும் யாழ்.மண்ணில் இருந்தார்கள். யாழ். மண்ணில் இல்லாத ஒருவரால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு ஜனநாயகக் கட்சி என்று சொல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வீட்டை விட்டு வெளியே வருவதற்கு உண்மையில் எமக்கு விருப்பமில்லை. ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ஜனநாயகம் மூலம் எமது பலத்தைக் காட்ட வேண்டியிருக்கின்றது. மக்களை ஒன்றுசேர்த்து எல்லோரையும் அணி திரட்ட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம்.

நாங்கள் தற்போது சுயேச்சையாகப் போட்டியிட்டாலும் நாளடைவில் அது கட்சியாகப் பரிணமிக்கும். ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு என்ற பெயரும் வைக்கப்பட்டு விட்டது.

எமது இலக்கு இளைஞர்கள் பயிற்றப்பட்டு ஒரே வழியில் கட்சியை வழிநடத்த வேண்டும். அதற்கான முழு முயற்சியை நாம் எடுப்போம். ஜனநாயகம் தழைத்து சர்வாதிகாரம் தோற்க வேண்டும்.” - என்றார்.



# அரச வாகனங்கள், சொத்துக்கள் தொடர்பில் அறிவிப்பதற்கு துரித இலக்கம் அறிமுகம்

அரச வாகனங்கள் அல்லது சொத்துக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் 1997 என்ற துரித இலக்கம் ஊடாக அறிவிக்க முடியும் எனப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இதுதவிர, அரச வாகனங்கள் அல்லது சொத்துக்கள் கடத்தப்படுகின்றமை தொடர்பிலும் அந்த இலக்கத்தின் ஊடாக அறிவிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரியான தகவல்களை வழங்குபவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படும் எனவும் பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.



# களு, வளவ கங்கைகளின் நீர் மட்டம் அதிகரித்தது

தொடரும் சீரற்ற வானிலை காரணமாக களு மற்றும் வளவ கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், எஹலியகொடை, இரத்தினபுரி, இறக்குவானை, மற்றும் பெல்மதுளை ஆகிய பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், புவாக்பிட்டிய பகுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக, கொழும்பு – அவிசாவளை பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதான அரசியல் கட்சிகளின் தேசியப் பட்டியல் வெளியானது



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான அரசியல் கட்சிகளின் தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக 29 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதன்படி, அந்த கட்சியின் தேசிய நிறைவேற்று குழு உறுப்பினர் பிமல் ரத்னாயக்க, இலங்கை மின்சார சேவையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால், யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் ராமலிங்கம் சந்திரசேகரன் உள்ளிட்டோர் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணியின் 29 தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இம்தியாஸ் பாகீர் மார்கர், எஸ்.விஜேயேந்திரன், நிஷாம் காரியப்பர், பழனிவேலு பரமேஸ்வரன், பாலகிருஸ்ணன் சிவநேசன், கணபதி நகுலேசன் உள்ளிட்டோரும் அந்தப் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, செந்தில் தொண்டமான், சுரேன் ராகவன், தலதா அத்துகோரள, ரவி கருணாநாயக்க, தினேஸ் குணவர்தன உள்ளிட்டோர் தேசியப் பட்டியல் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் தேசியப் பட்டியல் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவுள்ள 29 பேரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, உதுராவல தம்மரதன தேரர், சாகர காரியவசம், காமினி லொக்குகே, சி.பி.ரத்னாயக்க, திஸ்ஸ விதாரண, ஜானக திஸ்ஸ குட்டியாராச்சி, ஜயந்த கெட்டகொட உள்ளிட்ட 29 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், நடிகை அனுஷா தமயந்தி மற்றும் வசந்த ஹந்தபான்கொட ஆகியோரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலுக்காகப் பெயரிடப்பட்டுள்ளனர்

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு; உலக உணவுத் திட்டம் அறிவிப்பு



இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவுக்கும் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் ஊடாக இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு அதன் பிரதிநிதிகள் இதன்போது இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் உணவு நெருக்கடி நிலைமை தற்போது குறைவாக உள்ள போதிலும், தேவை ஏற்படும் போது புதிய வேலைத்திட்டங்கள் மூலம் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதியின் செயலாளரிடம் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சந்திப்பில், உலக உணவுத் திட்டத்தின் உள்ளூர் பணிப்பாளர் அப்துல் ரஹீம் சித்திக், அரசாங்க பங்காளித்துவ அதிகாரி முஸ்தபா நிஹ்மத், உலக உணவுத் திட்டத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி ஜெர்ட் ரெபெல்லோ, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரொஷான் கமகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஓய்வூதியர்களுக்கு அடுத்த வாரம் முதல் 3 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவு



சகல ஓய்வூதியதாரர்களுக்குமான மாதாந்த இடைக்காலக் கொடுப்பனவான மூவாயிரம் ரூபாவை அடுத்த வாரம் முதல் வழங்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நிதி அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடைக்காலக் கொடுப்பனவாக மூவாயிரம் ரூபா கொடுப்பனவு ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்படாமை தொடர்பில் ஆராயப்பட்ட பின்னர், அதே தொகையை அடுத்த வாரத்திற்குள் ஓய்வூதியதாரர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் மாதாந்த இடைக்காலக் கொடுப்பனவாக மூவாயிரம் ரூபாவை வழங்குவதற்காகக் கடந்த ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதியிடப்பட்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

எனினும் அதற்கான நிதி எதுவும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் சகல ஓய்வூதியதாரர்களுக்குமான மாதாந்த இடைக்காலக் கொடுப்பனவை அடுத்த வாரம் முதல் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஒக்டோபர் மாதத்துக்கான ஓய்வூதியம் ஏலவே ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதால், ஒக்டோபர் மாதத்துக்கான மூவாயிரம் ரூபா கொடுப்பனவை அடுத்த வாரத்திற்குள் அவர்களது கணக்கில் வைப்பிலிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் காலங்களில் குறித்த மூவாயிரம் ரூபா கொடுப்பனவை மாதாந்த ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொலிஸ் சேவை நீடிப்பு!

முன்னைய ஆட்சித் தலைவர்கள் பொலிஸ் துறையைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, குற்றச் சம்பவ விசாரணைகள் தொடர்பில் பண்ணிய திருக்கூத்துக்களை தாங்கள் ஆட்சிக்கு வந்தால் முழுமையாகக் கண்டுபிடித்து, அம்பலப்படுத்துவதோடு, குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கையையு எடுப்போம் என்று தேர்தலின் போதும் பிரசாரப்படுத்தித்தான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்டியது.

இப்போது ஆட்சி அதிகாரத்துக்கு வந்து, அதிகாரம் மீதான கட்டுப்பாட்டை முழுமையாக தனது கைகளுக்குள் கொண்டு வந்ததும், இந்த விடயத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழியை முன்னெடுக்க தேசிய மக்கள் சக்தி அரசு முழுமூச்சாக முயல்கின்றது எனத் தெரிகிறது.

ஈஸ்டர் குண்டு தாக்குதல் குற்றத்திலிருந்து பல்வேறு குற்றச் சம்பவங்களை விசாரித்து, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்பானவர்களை அம்பலப்படுத்தி, பொறுப்புக் கூறலை நிலை நாட்டுவதில் அநுரகுமார திஸநாயக்க அரசு மிக உறுதியாக இருப்பதாகவே தெரிகிறது

அதன் ஓர் அங்கம்தான் ஷானி அபேசேகராவை ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் பொலிஸ் சேவைக்கு மீள் உள்ளீர்க்கும் திட்டமாகும்.

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவை மீண்டும் பொலிஸ் சேவைக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க காவல்துறை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன் படி, ஷானி அபேசேகர, நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு வருட காலத்திற்கு சேவையாற்றவுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற பல சர்ச்சைக்குரிய குற்றங்கள் தொடர்பில் விசாரணை அதிகாரியாக இவர் கடமையாற்றியுள்ளார் என்பது முக்கிய விடயமாகும்

பிரபல குற்றப் புலனாய்வு அதிகாரியா ஷானி அபேசேகர, குற்றப் புலனாய்வுத் துறையின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை, கொழும்பைச் சுற்றி 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை, பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை, ஊடகவியலாளர் லஸந்த விக்ரமதுங்க படுகொலை, ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூடு போன்றவை தொடர்பான பல குற்றப் புலனாய்வு விசாரணைகள் ஷானி அபேசேகரவின் மேற்பார்வையில் இடம்பெற்றன.

அந்த சம்பவங்களுக்கு மேலதிகமாக, ஷானி அபேசேகர, ரோயல் பார்க் கொலை, அங்குலான இரட்டைக் கொலை, உடதலவின்ன கொலை, மொஹமட் சியாம் கொலை போன்ற பல சர்ச்சைக்குரிய கொலைகளின் விசாரணையில் ஈடுபட்ட அதிகாரியாகவும் அறியப்படுகிறார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் ஈஸ்டர் குண்டு தாக்குதல் சம்பவம் குறித்துத் தீவிர விசாரணை நடத்தி பல உண்மைகளை கண்டறியும் நிலைமையை நோக்கி அவரது குற்றப் புலனாய்வு முன்னேறிய சமயத்தில் தான் புதிய ஜனாதிபதியாக வந்த கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு ஷானி அபேசேகரவொ பழிவாங்கத் திட்டமிட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இதன் காரணமாக அவர் முன்னெடுத்த பல புலனாய்வு விவகாரங்கள் அப்படியே ஸ்தம்பித்துப் போயின. நேர்மையாக - நீதியாக - திறமையாக - குற்றப் புலனாய்வு விசாரணைகளை முன்னெடுத்த ஷானி அபேசேகர, அதற்காக பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டார்.

இப்போது அவரை மீளக் கொண்டு வந்து, பொலிஸ் சேவைக்குள் உள்வீர்த்து, மீண்டும் மேற்படி சம்பவங்களின் புலனாய்வு விவகாரத்தை விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து காத்திரமாக முன்னேறும் நோக்கத்தில் ஷானி அபேசேகர, இந்த நியமனத்தை ஓராண்டு காலத்துக்கு பெற்றிருக்கின்றார்.

ஆக, இந்தக் குற்றச் சம்பவங்களின் காரணகர்த்தாக்களை மடக்கும் முயற்சி சரிவரும் போலவே தென்படுகின்றது.

# சரக்கு ரயில் மீது பயணிகள் ரயில் மோதி பயங்கர விபத்து ஏற்பட்டது



தமிழ்நாட்டின் திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டை அருகே சரக்கு ரயில் மீது பயணிகள் ரயில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இரு ரயில்களும் மோதிக்கொண்டதில் இரண்டு பெட்டிகளில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

ஆந்திரா நோக்கிச் சென்ற மைசூரு தர்பங்கா எக்ஸ்பிரஸ் ரயில் கவரப்பேட்டை ரயில் நிலையத்துக்கு அருகே வந்தபோது அங்கு நின்றுகொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியதில் இரண்டு குளிரூட்டப்பட்ட பெட்டிகளில் தீப்பற்றியுள்ளது.

பெட்டிகளில் பற்றியுள்ள தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டனர்.

ரயிலில் பயணித்த பயணிகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இருப்பினும் இதில் உயிர் சேதம் எதுவும் பதிவாகவில்லை என்ற தகவல் வெளியாகி உள்ளது.

முதல்கட்டமாக சிக்னல் கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து காரணமாக சென்னையில் இருந்து செல்லும் ரயில்கள் நிறுத்தப்பட்டன.

விபத்தில்நான்குபேர்படுகாயமடைந்துள்ளனர்.அவர்களுக்கு மருத்துவமனையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதில் வட மாநில தொழிலாளர்கள் அதிகம் பயணித்தனர் என தகவல் கிடைத்துள்ளது. உள்ளூர் மக்கள், பயணிகள், பொலிஸார் மற்றும் உள்ளூர் மாவட்ட நிர்வாகத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ஹரியானாவில் பா.ஜ.க. அரசு ஒக்டோபர் 15 இல் பதவியேற்பு



ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. மீண்டும் வெற்றி பெற்றுள்ளநிலையில், பஞ்சுகுலா நகரில் ஒக்டோபர் 15 ஆம் திகதி புதிய அரசு பதவியேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஹரியானாவில் கடந்த 10 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சி உள்ளது. மாநிலத்தின் முதல்வராக மனோகர் லால் கட்டார் இருந்து வந்த நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார். இதையடுத்து புதிய முதல்வராக நயாப் சிங் சைனி பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறார்.

இந்த நிலையில், நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், பா.ஜ.க. மீண்டும் அறுதிப் பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றதை அடுத்து புதிய அரசு எதிர்வரும் 15 ஆம் திகதி பதவியேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முதல்வராக மீண்டும் நயாப் சிங் சைனியை நியமனம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவரோடு சிலர் அமைச்சர்களாக பொறுப்பேற்பார்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்பட மத்திய அமைச்சர்கள் பலர் பங்கேற்க உள்ளனர். இதனால் எதிர்வரும் 15 ஆம் திகதி பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள, உயர் அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஹரியானாவில் மொத்தம் உள்ள 90 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த 5 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெற்றது. இதில், ஆளும் பா.ஜ.க. – காங்கிரஸ் இடையே நேரடி போட்டி நிலவியது. ஆளும் பா.ஜ.க. 48 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைத்தது. கருத்து கணிப்புகளை பொய்யாக்கி ஹரியானாவில் பா.ஜ.க. தொடர்ந்து 3 ஆவது முறையாக ஆட்சியை பிடித்துள்ளது. காங்கிரஸ் 37 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

இந்திய தேசிய லோக் தளம் 2 இடங்களில் வெற்றி பெற்றது. 3 தொகுதிகளில் சுயேச்சை வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர் என்பதும் அவர்கள் பா.ஜ.கவுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.








# சுரங்கத் தொழிலாளர்கள் மீது தாக்குதல்; 20 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் தென் மேற்குப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்

இதன்போது, 7 பேர் காயமடைந்துள்ளனர் என அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் சுரங்கத்தொழில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.









# தங்கச் சுரங்கத்தில் சிக்கி ஒருவர் பலி 23 பேர் மீட்பு

மேற்கு அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்தில் உள்ள பயன்படுத்தப்படாத தங்கச் சுரங்கத்தின் மின் தூக்கி செயலிழந்ததன் காரணமாக ஒருவர் பலியானர்.

அத்துடன், ஆபத்தான நிலையில் இருந்த 23 பேர் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த கொலராடோ தங்கச் சுரங்கம் தற்போது தனியாருக்குச் சொந்தமான சுற்றுலாத் தலமாக மாற்றப்பட்டுள்ளது.

12 பேரைக் கொண்ட இரண்டு சுற்றுலா பயணக் குழுக்கள் தங்கச் சுரங்கத்தினுள் இருந்த போதே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

அதில் ஒரு குழுவினர் 6 மணி நேரத்தின் பின்னரே மீட்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.


சிறு காயங்களுடன் மீட்கப்பட்ட அந்தக் குழுவில் சிறுவர்களும் இருந்தனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மற்றொரு குழுவினர் அந்தத் தங்கச் சுரங்கத்தின் அடிப்பகுதியில் சிக்குண்டிருந்த போதிலும், பல மணி நேரத்தின் பின்னர் பாதிப்பின்றி மீட்கப்பட்டுள்ளனர்







# வன்னியில் தேசிய மக்கள் சக்தி ஊர்வலமாக வந்து வேட்புமனு!









(கி.வசந்தன்)

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை தேசிய மக்கள் சக்தி நேற்று வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி திசைகாட்டி சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில், வவுனியா – மூன்றுமுறிப்பு பகுதியில் இருந்து ஊர்வலமாக வந்த தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஊர்வலமாக வந்து வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நேற்றுக் காலை வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் உபாலி சமரசிங்க, செல்லத்தம்பி திலகநாதன், மயில்வாகனம் ஜெகதீஷ்வரன், பாத்திமா அயிஸ்த்தா, பிரேமரத்தின, ஜோக ராஜா சிவரூபன், அன்டன் கலை, அபுபாகீர் பிரைஸ்தீன், இராதாகிருஷ்ணன் ஆகியோர் வேட்பாளர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுளனர்.

# விசேட தேவையுடைய பெண்ணையும் உள்ளடக்கி வன்னியில் தமிழர் விடுதலை கூட்டணி வேட்புமனு







(கி.வசந்தன்)

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி “உதயசூரியன்” சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நேற்றுக் காலை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

வன்னி மாவட்டத்தில் குறித்த கூட்டணியானது தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவரும் சமூக ஆர்வலருமான செ.சந்திரகுமாரை (கண்ணா) முதன்மை வேட்பாளராகக் கொண்டு போட்டியிடுவதுடன், விசேட தேவையுடைய பெண் ஒருவரும் வேட்பாளராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.







# 9 ஏ சித்தி பெற்ற மாணவர்களுக்கு நிதி வழங்கி கௌரவித்த யாழ். நகை மாளிகை உரிமையாளர்

(ந.லோகதயாளன்)

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 9 பாடங்களிலும் "ஏ" தரச் சித்தியைப் பெற்ற 100 மாணவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா ஊக்கத் தொகை வழங்கி நியூ லலிதா நகை மாளிகை உரிமையாளர் கௌரவித்தார்.

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள நகைக் கடையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கின் பல பாகங்களையும் சேர்ந்த 100 மாணவர்களுக்கு இந்தக் கௌரவிப்பு இடம்பெற்றது.

திறமையான மாணவர்களை ஊக்கமளிக்கும் வகையில் இந்தக் கௌரவிப்பு நடைபெற்றது. இதன்போது மாணவர்களுக்குப் பாடப் புத்தகமும் அன்பளிப்பாக வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# ஓமந்தை வாள்வெட்டில் காயமடைந்தவரும் சாவு

## பலியானவர்களின் எண்ணிக்கை இரண்டாக உயர்வு

(கி.வசந்தன்)

காணிப் பிணக்கால் ஓமந்தையில் இடம்பெற்ற வாள்வெட்டில் படுகாயமடைந்த மற்றைய நபரும் நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்தார். இதனால், இந்தச் சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்தது.

வவுனியா – ஓமந்தை – கதிரவேலு பூவரசன்குளத்தைச் சேர்ந்த ரூ.திலீபன் (வயது 42) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நபரும் அவரின் மருமகனும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்தபோது அங்கு வந்த சிலர் அவர்கள் மீது மிளகாய்த் தூளை வீசிவிட்டு, அவர்களை வாளால் வெட்டினர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளங்கோ (வயது 38) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய நபரான திலீபன் படுகாயமடைந்த நிலையில் ஊரவர்களால் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

இரு குடும்பங்களுக்கு இடையே நிலவி வந்த காணிப் பிணக்கே இந்த வாள்வெட்டுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் -12.10.2024




இன்று பதற்றமும் கவனமின்மையும் காணப்படும். இதனை சமாளிக்க அமைதியை மேற்கொள்ள வேண்டும். இன்று சகஜமான அணுகுமுறையுடன் உங்கள் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடத்தில் பதட்டம் காரணமாக தாமதமாக பணிகள் நடைபெறும். பணிகளைக் கையாளும் போது பொறுமையான அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதும் நட்பான அணுகுமுறை கொள்வதும் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்க உதவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும் . அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

அதிக பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம். இறை வழிபாடும் பிரார்த்தனையும் மேற்கொள்வது சிறந்தது.




இன்று ஸ்திரமான, இலக்குகளை வெல்லக்கூடிய இனிமையான தருணங்களை சந்திக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். புதிய பணி வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் கடின உழைப்பின் காரணமாக நீங்கள் ஊக்கத் தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றையநாள்உங்கள்எதிர்பார்ப்பின்படி இருக்காது. எதிர்மறையான பலன்கள் ஏமாற்றத்தை தரும். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு தடவை யோசிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களையும் பாதுகாப்பின்மை உணர்வையும் தவிர்த்தல் வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சிறந்த புரிந்துணர்வை பராமரிக்க இயலாது. உங்களின் எரிச்சல் உணர்வை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகள் காரணமாக சேமிப்பது கடினமாக இருக்கும்.

கோபத்தின் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். உங்கள் நலனுக்காக பிரார்தனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சவாலான சூழ்நிலைகள் காணப்படும். அதனால் வெறுமையை உணர்வீர்கள். உறுதியான போக்கை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

உங்கள் கடின உழைப்பிற்கு தகுத்த பலன்கள் கிடைக்காது. இதற்குஉங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடாததே காரணம்.

உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இதனை உங்கள் துனையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் சேர்ந்து காணப்படும். பணப்புழக்கம் குறைவாக காணப்படும். பண இழப்புகளை தவிர்க்க நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம்காரணமாகஆரோக்கியம்பாதிக்கப்படும்.ஆரோக்கியமாய் இருக்க இந்த உணர்வை தவிர்த்தல் நல்லது.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இந்தச் சூழலைக் திறமையாகக் கையாள முடியும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பயனுள்ள யுத்திகளைக் கையாண்டு கவனமாக பணியாற்றினால் பணிகள் சுமூகமாக நடக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. இதனால் உறவின் நல்லிணக்கத்தைக் கெடுக்கும் கவனமற்ற வார்த்தைகளை தவிர்க்கலாம்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் சிறந்த மன ஆற்றலுடனும் காடுப்பட்டுடனும் காணப்படும் சிறந்த நாள். இன்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் அமைதி பெறுவீர்கள்.

இன்று பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கும் சூழல் காணப்படும். பணிகளை விரும்பி எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையே பரபஸ்பர மதிப்பு உயரும்.

பணப்புழக்கம் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் இருந்தால் உங்கள் இலக்குகளில் வெற்றி அடையலாம்.பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்தி நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில தடைகள் காணப்படும். உறுதியுடன் இருந்தால் தடைகளை சமாளித்து சிறப்பாக செயலாற்றலாம்.

தகவல் பரிமாற்ற பிரச்சினையும் கருத்து வேறுபாடும் காணப்படும். அமைதியாக இருப்பது மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. இந்து கூடுதல் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. வயிற்று உபாதை காரணமாக அவதிப்பட நேரலாம்.




அமைதியாக இருப்பதன் மூலம் முறையான முடிவுகளை எடுக்க இயலும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் பதட்டமின்றி சமநிலையில் இருக்கலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் நேரலாம். எனினும் கவனமாகப் பணியாற்றினால் இன்று சிறப்பாக இருக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை பராமரிப்பது நல்லது. இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள்.

பதட்டம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -12.10.2024



தனுசு

இன்று நீங்கள் எளிதான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. இனிமையான வார்த்தைகள் நல்ல பலனைத் தரும்.

இன்று புதிய பணி வாய்ப்புகளை இழக்கும் அதிர்ஷ்டமற்ற நிலை காணப்படும். இன்று ஏமாற்றமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இதனால் உங்கள் மன உறுதியை இழந்து விடாதீர்கள்.

உங்கள் துணையுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சூடான விவாதங்கள் ஏற்படலாம். இது மகிழ்ச்சியைக் குறைக்கும்.

இன்று பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

பல் வலி மற்றும் தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் குளிர்ந்த உணவு வகைகளை தவிர்ப்பது நல்லது.



மகரம்

உங்கள் மன உறுதி காரணமாக நீங்கள் வெற்றி பெறலாம். இன்று சிறந்த முன்னேற்றம் கண்டு மகிழ்வீர்கள்.

உங்கள் திறமைகள் வெளிப்படும். அது உங்கள் செயல்திறனில்பிரதிபலிக்கும்.உங்கள்சகபணியாளர்களுக்கு நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

இனிமையான வார்த்தைகளும் நல்ல புரிந்துணர்வும் உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றல் காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்



கும்பம்

இன்று உங்களிடம் தைரியமான உறுதியான அணுகுமுறை காணப்படும். உங்கள் இலக்குகளில் வளர்ச்சியும் வெற்றியும் அடைவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் செயல்திறனில் நல்ல தரத்தை பராமரிக்க இயலும்.

உங்கள் மகிழ்ச்சியான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை இணைந்து கொண்டாடுவீர்கள்.

அதிக பண வரவு காரணமாக உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.



மீனம்

இன்று நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். அவர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் செயல்திறன் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் சுமூகமான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களிடம் இன்று மன உறுதி காணப்படும்.





